# THIRUMARAI AASAAN


**S. Rajanayagam**
**Editor**
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 29 February 2016 Issue - 2


## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. நிறுவன ஆசிரியர் உரை | 4 |
| 2. ஏன் நல்லொழுக்க வாழ்க்கை ... | 9 |
| 3. பெண்கள் பகுதி | 15 |
| 4. வாலிபர் பகுதி | 19 |
| 5. சிறுவர் பகுதி | 23 |
| 6. ஒருவன் எப்படி பரிசுத்தவானாகிறான் | 26 |
| 7. மன்னிப்பும், ராஜ்யமும் | 28 |
| 8. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை | 32 |


**வாசகர்களின் கவனத்திற்கு**

- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# சவுல் என்கிற பவுல்

சவுல் என்ற மறு பெயருள்ள பவுல், உலக வரலாற்றில் பொன்னேடுகளால் பொறிக்கப்பட வேண்டிய வெகு சிலரில் ஒருவர். இவர் கிறிஸ்தவத்தைத் தழுவிய சூழ்நிலை மிகவும் சுவாரஸ்யமானது. அதை அப். 9, 22, 26 ஆகிய அதிகாரங்களை வாசித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இவர், வெகு வைராக்கியமாய்க் கடைப்பிடித்து வந்த யூத மதத்தை விட்டு விட்டுக் கிறிஸ்தவ மார்க்கத்தை தழுவியவர் (கலா 1 : 13, 14). இதில் வேடிக்கை என்னவெனில், ஒரு காலத்தில் இந்தக் கிறிஸ்தவத்தைத் தான் அழித்து ஒழித்து விடக் கங்கணம் கட்டிக் கொண்டு பாடுபட்டவர். (கலா 1: 23 ) இப்படிப்பட்ட வெறியர், திடீர் என்று மனம் மாற்றம் அடைந்தது மிகவும் எதிர்பாரததும், யூத மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்திய செய்தியாகவும் இருந்தது.

சவுலுடைய குணாதிசயங்கள் : கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொள்ளும் முன்னர் கூட அவர் சிறந்த மதவாதியும் ஒழுக்கமுமுள்ளவரே (பிலி. 3 : 6). அவர் எப்பொழுதும் சுத்த நல்மனச் சாட்சியோடு மனிதருக்கு முன்பாக மட்டும் அல்ல, தேவனுக்கு முன்பாகவும் நடந்து கொண்டவர் (அப். 23 : 1, 24 : 16). ஆனால் பாவம்! தான் நிலை நிறுத்த முயற்சிக்கிற யூத மதம் காலாவதி ஆகிவிட்டதை சவுல் அறியாதிருந்தார். (கொலோ 2 : 14 -17). இயேசு கிறிஸ்துவின் மரணத்துக்கும், உயிர்த்தெழுதலுக்கும் பின்னர் வாழ் கின்ற மக்கள் யூத மதத்தின் பிரமாணங்களின்படி இரட்சிப்படைய முடியாது என்பதை அறியாதிருந்தான். ( யோவான் 14 : 1 - 6 ). கிறிஸ்துவின் சுவிஷேத்தின் மேன்மையை விளங்கிக் கொள்ளாமல் கிறிஸ்தவத்தைத் தழுவின, தழுவுகிற மக்களைத் துன்புறுத்தி அந்த மார்க்கத்தையும் அழித்து விடுவது தான் தேவனுக்குச் செய்யும் தொண்டு என்று நினைத்தார். (I தீமோ 1: 13). இயற்கையாக, அவர் ஒழுங்கில்லாதவரும், துன்மார்க்கனும் அல்ல யூதமதத்தில் அவனுக்கு இருந்த பற்றும் வைராக்கியமுமே கிறிஸ்தவ

மார்க்கத்தின் மேல் பகைமை கொள்ளக் காரணமாயிருந்தது. பின்னர் ஒரு காலத்தில் அதை உணர்ந்து துக்கப்பட்டு, **" பாவிகளில் பிரதான பாவி "** என்று தன் அவலநிலையை அறிக்கையிட்டிருக்கிறார். (I தீமோ 1 : 13 – 15; பிலி 3 : 6).

கிறிஸ்தவத்தைத் தழுவுவதற்கு முன்பு, இயேசு கிறிஸ்து கட்டிய சபையை அழித்து நிர்மூலமாக்கிப் போட்டுத்தான் வேறு வேலை என்று வெறித்தனமாக அலைந்த சவுலுடைய வாழ்க்கை, ஒருவன் தவறான மதத்தைப் பின்பற்றுவதில் கூட நல்ல மனச்சாட்சி உடையவராக இருக்க முடியும் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு (கலா 1 : 23; அப் 9 : 1 – 2; 26 : 9 – 11). அதனாலன்றோ சாலமோன் ஞானி **" மனுஷனுக்குச் செம்மை யாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதன் முடிவோ மரண வழிகள் "** என்கிறார் ( நீதி 14 : 12 ). ஆதலால், இப்படி கர்த்தர் நிமித்தமாகத் தான் அவைகளைச் செய்தேன் என்று சொன்னாலும் அவர் தேவ சித்தத்தை அறிந்து கொள்ளாத ஒரு பாவியாகவே வாழ்ந்தார் (I தீமோ 1 : 13 – 15).

### கர்த்தர் ஏன் சவுலுக்குத் தரிசனமானார் ?

கர்த்தர் சவுலுக்குத் தரிசனமானது, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்துக்குப் புறம்பாக விசேஷித்த முறையில் அவரை இரட்சிப்பதற்காக அல்ல. சிலபேர் இரட்சிப்படைவதற்கு கர்த்தர் தரிசனமாக வேண்டும் என்று தவறாக நினைத்துக் கொண்டும், பேசிக் கொண்டும் திரிகின்றனர். ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு கர்த்தரை தரிசிக்க வேண்டும் என்ற விதியேதும் கிடையாது. (I பேதுரு 1 : 8) பின் ஏன் சவுலுக்கு தரிசனமானார் ? (I கொரி 15 : 8 ) சவுல் அப்போஸ்தலப் பட்டத்தைப் பெறுவதற்குரிய தகுதியை அடையக் கர்த்தரை தரிசிப்பது அவசியமாக இருந்தது. அப்பொழுது தான் அவர் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருக்க முடியும். (அப். 1 : 21, 22 : 26 : 16 – 18 ). பின்னர் ஒரு சமயம் இந்த சம்பவத்தை நினைவு கூர்ந்து **" எல்லோருக்கும் பின்பு அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார் "** என்று கூறுகிறார். ( 1 கொரி 15 : 8 ) அவர் கூறியதின் கருத்து என்ன? பாவியாகிய அவருக்கு, கிறிஸ்து பரமேறுவதற்கு முன்னர் அவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை; இப்பொழுது கர்த்தருடைய கிருபையால் அந்த அரும் வாய்ப்பைப் பெற்றேன் என்பதைத்தான் அவ்வாறு கூறினார். நாம் இன்றைக்கு அப்போஸ்தலர் ஆகும் சந்தர்ப்பம் இல்லை என்பதால் நாம் கர்த்தரை தரிசிக்க வேண்டியதில்லை. ஆகவே, எனக்கும் கர்த்தர் தரிசனம் கொடுக்க வேண்டும் என்று வீணாகக்

காத்திருக்க வேண்டாம். இந்த நினைவுகளை சிலர் சதா தங்கள் உள்ளங்களில் வைத்துக் கொண்டிருப்பதால் இவைகள் சில வேளைகளில் அவை கனவுகளாகத் தோன்றலாம். அது தரிசனமல்ல. " தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கிறது. பிர 5 :3 ; ஏசாயா 29 : 8 ஐக் கூட வாசிக்கவும்.

இந்நாட்களில் சவுலைப் போல, பாவியாக ஒருவன் வெளிச்சத்தைக்காண வேண்டியது அவனுடைய இரட்சிப்புக்கு அவசியமா?

சவுல் வெளிச்சத்தைப் பார்த்தது மத்தியான வேளை; இருள் சூழ்ந்த இரவு நேரத்தில் அல்ல. வெளிச்சத்தைக் காண்பதற்கு முன் அவர் எப்படிப் பாவியாக இருந்தாரோ அதே போல வெளிச்சத்தைக் கண்ட பிறகும் அவர் ஒரு பாவியே. வெளிச்சத்தைக் கண்ட பிறகு, **" ஆண்டவரே நீர் யார்? "** என்ற கேள்வியைக் கேட்டான். அதற்கு இயேசுவின் பதில் : **நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே** ( அப். 9 : 5 ). கவனியுங்கள்; இயேசு இவருடைய கேள்விக்குப் பதில் அளிக்கும் வரை அவர் இயேசுவை இன்னார் என்று அறிந்து விசுவாசிக்கவில்லை. " தேவனுடைய வசனத்தைக் கேட்பதினால் தான் விசுவாசம் வருகிறது " என்று பின்னர் அவரே பரிசுத்த ஆவியைக் கொண்டு எழுதுகிறார் (ரோமர் 10 : 17).

சவுல் பார்த்த மாதிரி ஒரு வெளிச்சத்தைக் காண்பது தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் ஒரு பகுதியன்று. சவுல் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படியாதவரை இரட்சிக்கப்படவில்லை ( எபி 5 : 8, 9; ரோமர் 6 : 17 – 18, 6 : 3 – 4) விசேஷித்த கிருபை, உணர்ச்சிகள் அல்லது வேறு எந்த செயல்பாடுகளும், அவைகள் உண்மையாக இருந்தாலும், போலியாக இருந்தாலும், அவைகள் தேவனுடைய மன்னிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியல்ல. தேவனுடைய வார்த்தைகளுக்குப் புறம்பான விசேஷித்த வரம் அது, இது என்ற எந்த அனுபவமாக இருந்தாலும் அவைகள் இரட்சிப்புக்குரிய தகுதிகளைத் தராது. சுவிசேஷமே இரட்சிப்புக்கு தேவ பெலன் (ரோமர் 1 : 16; எபி 4 : 12).

### இரட்சிக்கப்படுவதற்கு சவுல் செய்தது என்ன?

" ஆண்டவரே, நீர் யார்? என்ற சவுலின் கேள்விக்கு இயேசு கூறிய பதில் " " நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே " என்பது. இதைக்கேட்டவுடன் **சவுல் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?** என்றான். அதற்குத் கர்த்தர், **'' நீ எழுந்து**

**பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்".** என்றார் (இப் 9: 5, 6).

அந்தப்படியே சவுல் தமஸ்கு பட்டணத்துக்குள் கொண்டு வரப்பட்டார். அங்கே அவர் மூன்று நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருந்தார். அப் 9 : 11, **" சவுல் ஜெபம் பண்ணினார் "** என்று வசனம் கூறுகிறது. அவர் செய்த ஜெபம் அவருக்கு உடனடியாக இரட்சிப்பைத் தந்துவிட்டதா? நிச்சயமாக இல்லை. " எப்படி நீங்கள் அவ்வளவு உறுதியாய்ச் சொல்லுகிறீர்கள் என்கிறீர்களா? " என் இடைவிடாத, கடுமையான ஜெபத்தின் மூலமாக இரட்சிப்புப் பெற்றுவிட்டேன் என்று சுயதிருப்தியோடு நிமிர்ந்து நடைபோடும் ஒரு நண்பரின் காட்டமான கேள்வி இது. அவசரப்படாமல் கவனியுங்கள். அனனியா என்பவர் சவுலிடத்திற்கு அனுப்பப்படுகிறார். அந்த அனனியா சவுலிடம் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறார்? வேதாகமம் பேசட்டும், " இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு " என்றார். (அப் 22 : 16; அப் 9 : 18) இங்கே இன்னும் ஒரு கேள்வி. ஒரு பாவி திருமுழுக்குப் பெற்று விட்டதினாலேயே இரட்சிப்படைந்து விடுகிறாரா? சரியாகச் சொல்வோமானால் " இல்லை " என்பது தான் பதில். எந்த ஒரு நற்செய்தி உரைஞரும் அவ்விதமாய் பிரசங்கிக்கவில்லை. இரட்சிப்புக்கு விசுவாசம் மட்டும் போதும் என்பது எவ்வளவு அபத்தமோ, அதே அளவு அபத்தம் தான் ஞானஸ்நானம் மட்டும் ஒருவனை இரட்சிக்கும் என்பதும் அல்லது மனந்திரும்பினால் மட்டும் போதும் ( அப் 17 : 30, 31) அல்லது அறிக்கை செய்தால் மட்டும் போதும் (மத். 10 : 32, 33) என்பதும் .

தேவனுடைய வசனத்தை நன்கு புரிந்து கொண்டு வாசித்தால் ஒரு பாவி இரட்சிப்படைவதற்கு விசுவாசமும் வேண்டும். மனந்திரும்புதலும் வேண்டும். அறிக்கையிடுதலும் வேண்டும். திருமுழுக்கும் வேண்டும் என்பது தெரியவரும்.

பவுல் தான் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றேன் என்கிறார். (ரோமர் 6 : 3 - 4, கலா 3 : 26, 27 ) பவுல் தன் இரட்சிப்பைக் குறித்து உண்மையை சொல்லுகிறாரா? ஆம்! இரட்சிப்பு கிறிஸ்துவில் இருக்கிறது. ( II தீமோ 2 : 10 ). அந்த இரட்சிப்பை எப்படி அடைந்தார் ? கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டதின் மூலம் அந்த இரட்சிப்பில் பங்கடைந்தார். பவுல் அப்போஸ்தலன் விசுவாசத்தினாலே

இரட்சிக்கப்பட்டேன் என்று கூறுகிறார். ( ரோமர் 5 : 1, 2 )உண்மைதான். விசுவாத்தினால் இரட்சிக்கப்படும்படிக்கு அவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் என்பதையும் மறந்துவிடாதீர்கள் ( அப்.22:16 ). ஒருவன் கிறிஸ்துவுக்குப் புறம்பே வெறும் விசுவாசத்தைக் கொண்டு மட்டும் நீதிமானாகி விட முடியாது.

இதை வாசிக்கும் என் அருமை நண்பனே, சகோதரியே, பவுலின் முன் மாதிரியைப் பின்பற்றி கிறிஸ்துவின் உபதேசச் சட்டங்களுக்கு நீங்கள் ஒவ்வொருவரும் முழுமையாய்க் கீழ்ப்படிந்து இரட்சிப்பைச் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்று அன்புடன் மன்றாடுகிறேன்.

E.Z. **செல்வநாயகம்**

நமது, திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர், பெருமதிப்பிற்குரிய **சகோ. E.Z. செல்வநாயகம் ஐயா** அவர்கள் மறுமைக்குள் பிரவேசித்து 9. 2. 2016 - டன் 23 ஆண்டுகள் நிறைவடைவதால், அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

---

## நல்ல சபைக்கான சில அடையாளங்கள்

★ ஓர் நல்ல சபை, இயேசுவையும், அவருடைய வார்த்தைகளையும் உயர்த்திப் பிடிக்கிறதாக இருக்கும் ( I தீமோ. 4:2-4; அப். 20:7)

★ ஓர் நல்ல சபை, விசுவாசிகள் தேவனுடைய வார்த்தைகளில் வளருவதற்கான திட்டங்களைக் கொண்டிருக்கும் (II பேது.3:18; எபே 4:12)

★ ஓர் நல்ல சபை, ஆராதனையை ஒரு சிலாக்கியமாகக் கருதும் (யோவான் 4:24, எபே. 5:19; சங்.116:12)

★ ஓர் நல்ல சபை, ஆத்தும ஆதாயத்தில் நாட்டம் உள்ளதாக இருக்கும் (அப். 5:42; மாற்.16:15,16)

★ ஓர் நல்ல சபை இலக்குகளையும், சவால்களையும் சந்திக்கும் திறன் கொண்டதாக இருக்கும் ( I கொரி. 10:31; கொலோ. 3:17)

★ ஓர் நல்ல சபை கிறிஸ்துவின் சிந்தையுடன் செயல்படும் (பிலி. 2:6-11)

## ஏன் நல்லொழுக்க வாழ்க்கை மட்டும் இரட்சிக்கப்பட போதுமானதல்ல?

சகோ. J.C. சோட்

**நீ**ங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களோ இல்லையோ, அநேகமாக பெரும்பாலான ஜனங்கள் தங்கள் நற்கிரியைகளின் அடிப்படையில் இரட்சிக்கப்பட முயற்சி செய்வதால் அவர்கள் ஆத்துமாவில் இழந்து போவார்கள். இப்படிப்பட்ட சிந்தனை நித்திய ஜீவனை நாடி இயேசுவினிடத்தில் வந்த அந்த பணக்கார வாலிபனையே நமக்கு நினைவுப்படுத்துகிறது. நாம் இப்படியாக வாசிக்கிறோம். "அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி : **நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் : நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே ; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி : எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு : கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ்செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக ; உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக ; உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி : இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் ; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு : நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டான வைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு அப்பொழுது, பரலோகத்தில், உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும் ; பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்ட பொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்"** (மத்தேயு 19:16-22).

நாம் இப்பொழுது வாசித்த **இந்த சம்பவம் பழைய ஏற்பாடு**

**நடைமுறையில் இருந்த காலத்தில் நடந்த ஒன்று.** வேறுவிதமாகச் சொன்னால், நியாயப்பிரமாணம் அப்பொழுது அவர்களைக் கட்டுப்படுத்தியது. எனவே, இயேசு நியாயப்பிரமாணம் என்ன சொன்னதோ அதன்படி இந்த வாலிபனுக்குப் பதிலளித்தார். அவன் நித்திய ஜீவனை சுதந்தரிக்க வேண்டுமானால், கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்று இயேசு சொன்னது மோசேயின் கட்டளைகளைக் குறிக்கும். அந்த வாலிபன் அந்தக் கற்பனைகளை எல்லாம் தன் சிறுவயது முதல் கைக்கொண்டு வருவதாக இயேசுவுக்குப் பதிலளித்தான். இது குறித்து நாம் எண்ணிப் பார்க்கும் போது இந்தக் கற்பனைகளையெல்லாம் அவன் கைக் கொண்டிருப்பதனால் நிச்சயமாகவே அவன் ஒரு நல்லொழுக்கமுள்ள வனாகத்தான் இருந்திருக்கிறான். வேறுவிதமாகச் சொன்னால், எப்படிப் பார்த்தாலும் அவன் துன்மார்க்கனோ அல்லது பொல்லாதவனோ அல்ல. இங்கே அவன் பரலோகம் போவதற்குத் தான் தகுதியானவன் என்று நினைத்துக் கொண்டு, வெறுமனே அதற்கான அங்கீகாரத்தைக் கர்த்தரிடம் பெறுவதற்காக வந்தது போலவே நமக்குத் தோன்றுகிறது. இந்தக் காரியத்தில் இவனுடைய நற்குணங்கள் மட்டும் போதுமானதாக இல்லை. இயேசுவால், அவனுடைய இருதயத்திற்குள்ளும், ஜீவியத்திற்குள்ளும் உற்றுப்பார்த்து, அங்கே ஒரு தடையிருந்ததைக் காண முடிந்தது. இவன் ஒரு செல்வச் செழிப்புள்ள வாலிபனாக இருந்தபடியால் தன் நம்பிக்கையை ஐசுவரியத்தின் மேல் வைத்திருந்தான். எனவே தான், இயேசு அவனிடம் அவனுக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு தன்னைப் பின்பற்றும்படி சொன்னார். அதன் பின்பு, நமக்கு ஒரு சோகமான வாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான் என்று. நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை மாத்திரம் ஒருவனை இரட்சிக்கப் போதுமானதல்ல.

இது சம்மந்தமாக மற்றுமொரு சிறந்த உதாரணமாக கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரின் சம்பவத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொர்நேலியு ஒரு புற ஜாதியான். அவன் இராணுவத்தில் ஒரு பொறுப்புள்ள பதவியில் இருந்தான். அதாவது, ஒரு நூற்றுக் கதிபதி. வேத வசனம் இப்படிச் சொல்லுகிறது "அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும், தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான் " (அப்போஸதலர் 10 : 2). ஆயினும், அவன் ஆத்துமாவில் இழந்த நிலையில் தான் இருந்தான். கர்த்தருடைய

வழிநடத்துதலினால் கொர்நேலியும் அவன் வீட்டாரும், பேதுருவும் அவனுடைய சகோதரர்களும் ஒன்று சேர்க்கப்பட்டார்கள். இச்சமயத்தில் பேதுரு அவர்களுக்கு பிரசங்கிக்கத் தொடங்கினார். அப்போது நற்செய்தியானது யூதர்களுக்கு மாத்திரமல்ல, புறஜாதிகளுக்கும் சொந்தம் என்பதை யூதர்கள் நம்பும் படியாக கொர்நேலியு மற்றும் அவன் வீட்டார் மீது பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். அதன் பின்பு பேதுரு " நம்மைப் போலப்பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்தானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டுக்கொண்டார்கள் ", (அப்போஸ்தலர் 10 : 47,48 ). இப்போது இந்த கொர்நேலியு வாழ்ந்த வாழ்க்கையை நீங்கள் மறுபடியும் கவனித்தால், அவன் தேவபக்தியுள்ளவனும், தன் வீட்டார னைவரோடும் தேவனுக்கு பயந்த வனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். இன்று கூட இப்படிப்பட்ட மனிதன் மிக நல்ல மனிதனாகவே கருதப்படுவார். ஆயினும், கொர்நேலியு ஆத்துமாவில் இழந்து போன நிலையில் தான் இருந்தார். எனவே, அவருக்கு சுவி சேஷத்தைக் கேள்விப்பட அவசியப்பட்டது,அதை விசுவாசிக்க வேண்டிய தாயிருந்தது; இரட்சிக்கப்படும்படியாக சுவிசேஷத்திய்கு கீழ்ப்படியவும், கர்த்தருடைண சபையிலே சேர்க்கப்படவும் வேண்டியதாயிருந்தது ; இரட்சிக்கப்படும்படியாக சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியவும், கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்படவும் வேண்டியதாயிருந்தது. ஒருவேளை அப்படிச் செய்ய கொர்நேலியு மறுத்திருந்தால், எவ்வளவு நற்கிரியைகளை அவன் செய்திருந்தாலும் இழந்து போன நிலையில் தான் இருந்திருப்பார்.

ஒருவர் இரட்சிக்கப்பட நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை வாழ வேண்டுமென்பது உண்மை தான். இதன் பொருள், ஒருவர் கெட்ட மற்றும் தவறான காரியங்களைச் செய்யாதபடி தன்னை விலக்கி காத்துக் கொள்வது தான். மேலும், நல்லொழுக்கமுள்ள ஒருவர் மாம்சத்தின் கிரியைகளையும், இந்த உலகத்தின் காரியங்களையும் செய்ய முடியாது என்றும் பொருள்படும். பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதினார். "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசி மார்க்கத்தாரும்; விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்கராரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும்

தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை ". (I கொரிந்தியர் 6:9,10). உலகத்தாரோடு கொரிந்து பட்டணத்து சபையார் கொண்டிருந்த ஐக்கியம் பற்றி பவுல் இப்படிச் சொல்கிறார். " விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப் போக வேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்ன வென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவர் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்கார னாயாவது, விக்கிரகாராதனைக் காரனாயாவது உதாசினனாயாவது, வெறிய னாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால் ,அவனோடே கலந் திருக்கக் கூடாது; அப்படிப்பட்டவனுடனே கூட புசிக்கவுங்கூடாது " (I கொரி. 5:9-11). இங்கே பவுல் உலகத்தாரோடு இடைபடாமல் இந்த வாழ்க்கையைக் கழிப்பது முடியாத காரியம் என்று சொல்கிறார்; ஆனால், கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரன் என்று வரும் போது, அவன் உண்மையுற்ற, தேவ பக்தியில்லாத வாழ்கையை நடத்தினால் அப்படிப்பட்டவனோடு நாம் எந்த ஐக்கியத்தையும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்கிறார்.

பவுல் கலாத்திய சகோதரர்களுக்கு தொடர்ந்து சொல்லும் போது, "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன : விபசாரம், வேசித்தனம் அசுத்தம், காமவிவகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னது போல் இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன் " ( கலாத்தியர் 5:19-21 ). இது போன்று பல்வேறு வேதவாக்கியங்களில் மேற்சொல்லப்பட்ட பாவ நடவடிக்கைகளில் ஒருவர் ஈடுபட்டுக் கொண்டு தேவனுடைய ராஜ்யம் அல்லது கர்த்தருடைய சபைக்குள் பிரவேசிக்க முடியாது என்று சொல்லுகிறார். அதுபோலவே, கிறிஸ்தவர்கள் இத்தகைய பிரியப்படுத்த முடியாது. இப்படிப்பட்ட காரிய்டகளைச் செய்யாத ஒருவர் இதை ஆதாரமாக வைத்து மாத்திரமே இரட்சிக்கப்பட முடியாது என்றாலும், கர்த்தர் ஒரு கிறிஸ்தவன் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலக வேண்டும் என்று விரும்புகிறார் (I தெசலோனிக்கேயர் 5:22).

சில மக்கள், கிறிஸ்தவர்களுக்கு மற்ற மதங்களில் இருப்பவர்களைக் காட்டிலும் ஒழுக்க ரீதியான சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கின்றனர். எனவே, அவர்கள் ஒரு

கிறிஸ்தவன் புகை பிடிக்கலாம், மதுபானம் குடிக்கலாம், ஒழுக்கக்கேடான காரியங்களில் ஈடுபடலாம், கெட்டவார்த்தைகளைப் பயன்படுத்தலாம். அசிங்கமாக உடை உடுக்கலாம் என்றெல்லாம் நினைக்கிறார்கள். நிச்சயமாகவே, வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதையும், ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பது என்றால் என்ன என்பதையும் அறிந்தவர்கள், இது அப்படியல்ல என்பதை அறிவார்கள். தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள், இத்தகைய ஒழுக்கக்கேடான காரியங்களில் ஈடுபடுவது உண்மைதான், இப்படிச் செய்பவர்களிடத்தில் தேவன் பிரியமாயிருப்பதில்லை. அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் இழந்து போவார்கள். ஒருவன் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்தவனாவதற்கு அவன் தேவனிடத்திலும், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதிலும் மாத்திரம் விசுவாசம் வைத்தால் போதாது. மாறாக, அவன் தன் எல்லாப் பாவங்களிலிருந்தும் மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு இறுதியாக தன் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும். இவைகள் எல்லாவற்றையும் ஒருவர் செய்தால் மாத்திரமே கர்த்தர் அந்த நபரை இரட்சிக்கவும், தம்முடைய சபையிலே சேர்த்துக் கொள்ளவும் விரும்புகிறார். ஒரு கிறிஸ்தவர் ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அவர் மரணபரியந்தம் கர்த்தருக்கு உண்மையுள்ளவராக இருக்க வேண்டும். இதை நாம் வேதவசங்களில் திரும்பத் திரும்ப வாசிக்கிறோம் (மாற்கு 16:15, 16; அப்போஸ்தலர் 2:38; மத்தையு 10:32; அப்போஸ்தலர் 2:47; வெளிப்படுத்தல் 2:10).

இப்போது ஒருவர் நல்லொழுக்கமுள்ள நபராக இருந்து கொண்டு, அதனடிப்படையில் தான் இரட்சிக்கப்பட்டதாக நினைத்துக்கொள்ளலாம். ஆனால், தான் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், மற்ற துன்மார்க்கர் போல தானும் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும். இந்த நல்லொழுக்க முள்ளவர், தன்னுடைய நற்பண்புகளை வைத்து மட்டும் இரட்சிக்கப்பட முடியாது. ஒருவர் செய்த நீதியின் கிரியைகள் அவரை இரட்சிக்காது (எபேசியர் 2:8,9 தீத்து 3:5) ஒருவர் தான் இரட்சிக்கப்பட நற்பண்புகளை மாத்திரம் சார்ந்திருந்தால், அவர் முதலில் அந்த பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும். எல்லாரும் பாவம் செய்திருக்கிறோம் என்று பவுல் சொல்கிறார் ( ரோமர் 3:23). ஆகவே, " இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார் " என்று நாம் வாசிக்கிறோம் (லூக்கா 19:10 ). மனிதன் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டு விட்டபடியால் கிறிஸ்து மரிக்கவில்லை. மாறாக, மனிதன் இழந்து போய் இரட்சிக்கப்பட வேண்டிய

தாயிருந்தபடியால் தான் கிறிஸ்து மரிந்தார். கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்று பவுல் சொன்னார் (கொரிந்தியர் 15:1-4). பேதுரு இப்படியாகச் சொல்கிறார். ஏனெனில், " கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில், சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார் ; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார் " (I பேதுரு 3 : 18).

என் நண்பரே, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? அப்படி இரட்சிக்கப்பட்டிருந்தால், எப்படி நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள்? நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை வாழ்வதன் மூலமாக பரலோகம் செல்ல முயற்சி செய்பவர்களில் ஒருவராக இருக்கிறீர்களா? நீங்கள் உங்கள் நம்பிக்கையை உங்கள் மீதோ, உவக சம்பத்தின் மீதோ, சில மனிதன் மீதோ, மனிதரால் உண்டாக்கப்பட்ட சில முறைமைகள் மீதோ அல்லது இந்த உலகத்திலுள்ள ஏதாவது ஒன்றின் மீதோ வைத்திருக்கிறீர்களா? அப்படியென்றால், உங்கள் சொந்த முயற்சியினால் பரலோகம் செல்ல முயற்சி செய்கிறீர்கள் என்று பொருள். இது உண்மையானால் நீங்கள் அப்படிச் செய்ய முடியாது என உணர்ந்து கொள்ள வேண்டும். கிறிஸ்து அல்லாமல் வேறொருவராலும் நம்மை இரட்சிக்க முடியாது. நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, மரண பரியந்தம் தூய்மையான தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ்ந்தால், அவர் உங்களை இரட்சிப்பதாக மாத்திரம் வாக்குத்தத்தம் பண்ணாமல், பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டைத் தருவதாகவும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். இவைகளை எடுத்துரைப்பது தான் வேதாகமும், கிறிஸ்தவமும்.

வெகுகாலத்திற்கு முன்பு தேவனுடைய தீர்க்கதரிசி ஒரு கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். அது அன்றும் உண்மையாக இருந்தது, இன்றும் உண்மையாக இருக்கிறது. அவர் சொன்னார், கர்த்தாவே, **" மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன் "** என்று ( எரேமியா 10:23 ). இதை ஒத்துக்கொள்வதற்கு தாழ்மை தேவை. ஆனால், ஒருவர் இப்படியாச் செய்யும் போது ஞானமுள்ளவராகிறார்.

மறுபடியும், நீங்கள் யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தாலும், நல்லவராக இருந்தாலும், கெட்டவராக இருந்தாலும், நீங்கள் இரட்சிக்கப்படும்படி தேவனுக்குக் கீழ்ப்படிய நான் உங்களை வலியுறுத்த விரும்புகிறேன். அப்போது தான், நீங்கள் இரட்சிக்கப்பட முடியும் ( மாற்கு 16:16 ) அப்போது தான், கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார் (அப்போஸ்தலர் 2:47).

# நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

சகோ. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அன்பும், பிரியமுமான சகோதரிகளே! இம்மாதமும் நாம் அனைவரும் சேர்ந்து கர்த்தருடைய வார்த்தைகளை ஆராய்ந்து பார்க்க தேவன் கொடுத்த சிலாக்கியத்துக்காக கோடான கோடி நன்றிகளை ஏறெடுத்துக் கொள்வோம்.

ஏசாயா 6:8 ல், பின்பு, "**யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான், இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்**" என்ற வசனப் பகுதியை வாசிக்கிறோம். கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் அவருக்காக பற்பல முக்கியமான வேலைகளைச் செய்வதற்காக சுவிசேஷத்தால் அழைக்கப்பட்டிருக்கிறோம். தேவன், இதைச் செய், அதைச் செய் என்று நம்மை கட்டாயப்படுத்தமாட்டார். ஆனால், நாமாக வலிய முன் வந்து, ஏசாயாவைப் போல, இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும் என்று சொல்லி வேலை செய்யும் மனப்பாங்கைப் பெற்றிருக்கிறோமா என்று நம்மிடம் எதிர்பார்க்கிறார். தேவனுடைய ராஜ்ஜியமாகிய சபையிலே நம் எல்லோரும் செய்யக்கூடிய வேலைகள் நிறைய உள்ளன. ஒருவேளை, திறமைகளில் ஒருவருக்கொருவர் மாறுபட்டிருந்தாலும் நாம் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வேலைகள் நிறையவே உள்ளது. தேவையானது என்னவென்றால், செய்ய வேண்டும் என்ற விருப்பம் நமக்குள் இருக்க வேண்டும்.

சரி, நாம் செய்யவேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பதில் முதலாவது காரியம், ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி.

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, ஏதோ இது பெண் களுக்கான வேலையாக இல் லையே என்று நினைக்கத் தோன் றலாம். அநேக சமயங்களில், அடுத்தவர்களின் தேவைகளில் மிகவும் கவனமாக உதவி செய்து விட்டு நம்முடைய சொந்த ஆவிக் குரிய வளர்ச்சியில் கவனம் செலுத் தாமல் அலட்சியம் செய்து விடுகி றோம். பெண்களின் வேலை ஒரு போதும் செய்து முடிக்கப்படாதது என்று சொல்வது உண்மைதான். சுத்தம் செய்வது, துணிகளை பாதுகாப்பது, உணவுப்பொருள் வாங்குவது, சமைப்பது, கணவன், பிள்ளைகள் என்று கவனம் முழுவதும் அவர் களுக்காகச் செலுத்துவது என்று நேரத்தை செலவு செய்து விட்டு, நமக்காக வேதம் வாசித்து, ஜெபம் பண்ணி, வசனத்தை தியானிப்பது போன்ற மிக முக்கியமான காரியங்களுக்கு நேரத்தைக் கண்டுபிடிக்க முடிவதில்லை, பெலனும் இருக் காது. இப்பேர்ப்பட்ட நேரங்களில் தான் நாம் எதற்கு முன்னுரிமை கொடுக்கிறோம் என்ற கேள்வி எழுகிறது. இது நியாயமான ஒன்றுதான்.

நியாயமும், நீதியும் தேவ னுக்கே சொந்தமான ஒன்றாக இருப்பதால் இதைக் குறித்து அவர் என்ன வெளிப்படுத்தியிருக்கிறார் என்று பார்ப்போம். நாம் அனை வரும் அறிந்திருக்கும் மார்த்தாள், மரியாள் சம்பவத்தில் (லூக்கா 10:38 42) மார்த்தாள் இயேசுவைத்தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டாள். அவள் சகோதரி மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து வசனத்தை கேட்டுக் கொண்டிருந்தாள். பார்த்தாலே, நீ அநேக காரியங்களைக்குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே; மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத்தெரிந்து கொண்டாள் என்று சொல்கிறார். அப்படி யானால், யாரையுமே வீட்டிலே ஏற்றுக் கொண்டு அவர்களுடைய தேவைகளை சந்திக்கக் கூடாது என்பது அர்த்தமா? கட்டாயமாக இல்லை. ஏனென்றால், மத்: 20:27 ல் உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாக இருக்க விரும்பினால், அவன் உங்க ளுக்கு ஊழியக்காரனாயிருக் கக்கடவன் என்று நமதாண்ட வரும், அருமை இரட்சகருமா யிருக்கிற இயேசு கிறிஸ்து சொல்லி யிருக்கிறார். காரியம் என்ன வென்றால், சரீரத் தேவைகளுக் காகவே நம் முழு நேரத்தையும் செலவு செய்துவிட்டு ஆவிக்குரிய காரியங்களை அப்படியே ஒதுக்கி விடுகிறோம். வீடு, வாகனம், ஆடைகள், பூமிக் குரிய சொத்து இவையெல்லாம் நம்மை விட்டு கடந்து சென்று விடும். ஆனால், நம்முடைய ஆத்துமாவும்,

மற்றவர்களின் ஆத்துமாவும் என்றென்றும் வாழ்ந்து கொண் டிருக்கும். முதலாவது தேவனு டைய இராஜ்யத்தையும், அவரு டைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப் படும். (மத் 6 :33).

நாம் எப்படி ஆவிக்குரிய ரீதியிலே வளர்வது? நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசன மாகிய களங்கமில்லாத ஞானப் பாலின்மேல் வாஞ்சையாயிருங் கள் (1பேதுரு : 2 : 3) அப்போஸ் தலனாகிய பவுல், தெசலோனிக் கேயர்களுக்கு எழுதும் போது, உங்கள் விசுவாசம் மிகவும் பெரு குகிறபடியினாலும் (1 தெச 1 : 3) என்று பாராட்டுகிறார். இதைப் பற்றி பேதுரு ஆசிரியர் இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலும் அவரை அறிகிற அறிவினாலும் வளருங்கள். (2 பேதுரு 3:18) என்று கூறு கிறார். நம் சரீரம் வளர்ந்து, முதிர்ச்சியடைந்து பின்பு தேய்ந்து விடுகிறது. ஆவிக்குரிய வளர்ச்சி என்பது தொடர்ந்து தெடரக்கூடிய ஒன்று. பவுல் கொரிந்து பட்டணத்தில் உள்ள கிறிஸ்துவின் சபை விசுவாசி களுக்கு கூறும் போது ஆனபடியி னாலே நாங்கள் சோர்ந்து போகிற தில்லை; எங்கள் புறம் பான மனுஷ னானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது என்கிறார். (2 கொரி 4 : 16). ஆகவே, வளர்ச்சி அவசியம்.

இரண்டாவதாக, தேவன் நாம் கற்றுக்கொடுப்பவராக (ஆசிரியர்) இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். நம் முன்னுதார ணத்தின் மூலமோ அல்லது நம் வாழ்க்கையின் மூலமோ நாம் அனைவரும் ஓர் ஆசிரியை யாகவே இருக்கிறோம். மனைவி களாகிய நாம் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறோம். அப்பொழுது அவர்களில் யாரா வது திருவசனத்திற்குக் கீழ்ப்படியா தவர்களாயிருந்தால், பயபக்தி யோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையைப் பார்த்து, போதனை யின்றி, மனைவிகளின் நடத்தை யினா லேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள். (1 பேதுரு 3 : 1 2 ) என்று வாசிக்கிறோம். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்று இயேசு கிறிஸ்து மத் : 5 : 16 ல் கூறுகிறார். ஒருவேளை நம் வாழ்க்கையைப் பார்த்து சுவிசே ஷத்திற்கு ஒருவர் கீழ்ப்படிந்தாலும், தேவனுடைய வார்த்தையே

தெளிவையும், இரட்சிப்பையும் கொடுக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷமே அதை விசுவாசிக்கிற யாருக்கும் இரட்சிப்பு உண்டாக தேவ பெலனா யிருக்கிறது (ரோமர் 1:16) என்று வாசிக்கிறோம்.

கற்றுக் கொடுக்கிற வேலை அவ்வளவு முக்கியமானதா என்றால், ஆம் முக்கியமானது தான். ஏனென்றால், முதலாவதாக போதிக்க வேண்டு மென்பது தேவனுடைய கட்டளை. உலகமெங்கும் போய் போதிக்க வேண்டும் என்று சீடர்களுக்கு கட்டளையாக கொடுத்திருக்கிறார். (மத்:28:18 20). எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப் பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே. ஆகையால், பிதாவினி டத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான். (யோவா:6:45). நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட் களாயிருக்கிறோம்...(1கொரி 3:9, 10 ). என்று வாசிக்கிறோம். அப். பவுல் தீத்துவுக்கு எழுதும் போது, முதிர்வயதுள்ள ஸ்திரீகள் பாலிய ஸ்திரீகளுக்கு போதிக்கிற வர்களாயிருக்க வேண்டும் (தீந்து : 2:3,5) என்று எழுதியிருக்கிறார்.

பழைய ஏற்பாட்டிலும் பார்க்கும்போது போதித்தல் பற்றிய காரியங்கள் வலியுறுத்தப்பட் டுள்ளது. ( உபா : 4 :9; 6:7,9 ). இயேசு கிறிஸ்து மலைப் பிரசங்கத்திலே போதிக்கும் போது கற்பனைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவன், பரலோக ராஜ்யத் தில் பெரியவன் என்னப்படுவான் ( மத். 5:19) என்று மிகவும் அழகாக, சரியாக சொல்லியிருக்கிறார். வளர்ச்சியின் ஓர் அடையாளம் போதனை. நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல; பாலை உண்ணத் தக்கவர்களானீர்கள். ( எபி. 5 : 12 ) என்கிறார். எந்த வகுப்பாக இருந்தாலும் ஓர் ஆசிரியர் தான் மிக அதிகமாக கற்றுக்கொள்கிறார்.

ஆக, அருமையான சகோதரிகளே, தேவன் இம்மாதம் நம்மிடம் விரும்பும் இரண்டு காரியங்களான ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் பிறருக்கு கற்றுக் கொடுப்பது பற்றி வேத வசனங்களின் துணை கொண்டு பார்த்தோம். நாம் இந்த இரண்டு காரியங்களையும் செய்து தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவோம். எப்படி செய்வது என்று வேத வசனங்கள் நமக்கு போதிக்கிறது. அதை படித்து, ஜெபித்து, தியானித்து நான் என்ன செய்ய வேண்டும் என்று கேள்வி கேட்டு, வசனம் சொல்கிறபடி செயல்படுவோம். தேவன் அதற்கு உதவி செய்வார்!! ஆமென்!.

# நீங்கள் கிறிஸ்துவுக்கு சீஷர்களாயிருக்கிறீர்களா?

Bro. பென்னி மார்ட்டின்

**பி**ரியமான வாலிப கண்மணிகளுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நாமெல்லோரும் நம் எஜமானாகிய கிறிஸ்துவுக்கு சீஷர்களாக்கும்படி அவரிடமிருந்து கட்டளைப் பெற்றிருக்கிறோம். மத்தேயு 28:18-20 வசனங்களில் நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்து " **ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து நான்உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள் ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்** " என்றார். இந்த வசனத்தில் நாம் கிறிஸ்துவுக்காக பலரை சீஷராக்க வேண்டுமென்பது அவருடைய பிரதானக் கட்டளையாயிருக்கிறபடியால் அது நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. இன்றைய நாட்களில் பல வாலிபர்கள் கிறிஸ்துவின் மீது விசுவாசம் உடையவர்களாயிருக்கிறார்கள், வாரந் தோறும் தேவனை ஆராதிக்கும்படி சபை கூடி வருகிறவர்களாகவும் இருக்கி றார்கள், அவ்வப்போது சபை மூலமாக நடத்தப்படும் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்கள். இப்படிச் செய்வதினால் அவர்கள் கிறிஸ்துவுக்கு சீஷர் களாகிவிடமுடியாது. அப்படியென்றால், சீஷத்துவத்தில் எவைகளெல்லாம் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக நாம் காண்போம்.

### I. சீஷத்துவத்தின் விளக்கம்

சீஷன் என்பவன் ஒரு கற்றுக்குட்டியாக இருக்கிறான்: அவன் கற்றுக்குட்டியாக மட்டுமல்லாமல் கற்றுக்கொண்டவைகளை பின் பற்றுகிறவனாகஇருக்கிறான்.வேறுவிதமாகச்சொன்னால்,சீஷன்என்பவன் தன் குருவை அப்படியே பிரதிபலிக்கிறவனாக இருக்கிறான். நம் குருவாகிய இயேசுகிறிஸ்து "**தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்**" என்று சொல்லியிருக்கிறார் (லூக்கா 6:40). நாம் கிறிஸ்துவுக்கு சீஷர்களாயிருக்க வேண்டுமானால் அவருடைய குணாதிசயங்களைநம்வாழ்க்

கையில் பிரதிபலிக்கிறவர்களாயிருக்க வேண்டும். மேலும், நாம் அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்கவேண்டுமென்பது, மனித இனத்தை இரட்சிப்பதற்கான தேவனுடைய திட்டத்தில் அங்கமாயிருந்திருக்கிறது ( ரோமர் 8:29 ). நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றி அவரைப் போலிருக்க முயற்சிக்கிறீர்களா? அப்படிச் செய்யவில்லை யென்றால் நீங்கள் கிறிஸ்துவுக்கு சீஷர்களாயிருக்க முடியாது. பிரியமானவர்களே! இவ்வுலகில் பல வாலிபர்கள் மாயையான காரியங்களைப் பின்பற்றி மாண்டு கொண்டிருக்கிறார்கள், பலர் சரியான வழிகாட்டி இல்லாதபடியால் பிசாசின் பிடியில் சிக்கித் தவிக்கிறார்கள் அவர்களை மீட்டெடுக்கும்படி மீட்பர் நமக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். அக்கட்டளையை நாம் நடைமுறைப்படுத்தும்போது நாம் அவர்களை கிறிஸ்துவின் சீஷர்களாக்க முடியும். அடுத்ததாக, நாம் உண்மையான சீஷர்களின்அடையாளங்களை வேதவசனத்தின் வெளிச்சத்தில் காணலாம்.

### II. **சீஷத்துவத்தின் அடையாளங்கள்**

இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: " நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் " என்றான் ( யோவான் 8:31 ). இது நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தால் தான் அவருக்கு சீஷர்களாக இருக்க முடியும் என்று சொல்கிறது. மேலும், இது கிறிஸ்துவின் உபதேசத்தின்படி செய்வதையும் குறிக்கிறது (யாக்கோபு 1:21-25). சீஷத்துவத்தின் மற்றொரு அடையாளம், நாம் ஒருவரையொருவர் அன்பா யிருந்தால் இவ்வுலகம் நாம் கிறிஸ்துவின் சீஷர்கள் என்பதை அறிந்து கொள்ளும் ( யோவான் 13:34,35). நாம் கிறிஸ்துவின் சீஷர்களென்று சொல்லிக்கொண்டு பிறரோடு சண்டைபண்ணுகிறவர்களாக இருந்தால் அது உலகத்தின் பார்வையில் கிறிஸ்துவைக் குறித்து மோசமான எண்ணத்தை உருவாக்கிவிடும். தேவனுடைய நாமம் தூஷிக்கப்படும். பிரியமானவர்களே! ஒரு சில கிறிஸ்தவர்கள் தவறான செயல்பாடுகளில் ஈடுபட்டு, சீஷத்துவத்துக்கு அவப்பெயரை வாங்கித் தந்திருந்தாலும் கிறிஸ்துவின் சீஷர்கள் அன்பானவர்கள் அவர்கள் யாருக்கும் தீங்கிழைக்க மாட்டார்கள். அவர்கள் சண்டைபோட மாட்டார்கள் என்னும் பெயர் இன்னும் இருக்கிறது, அந்த அடையாளத்தை நாம் தொலைத்துவிட வேண்டாம்.

சீஷத்துவத்தின் மற்றொரு அடையாளம் நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்க வேண்டும் என்பதாயிருக்கிறது. நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்து **" நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்**

**படுவார் எனக்கும் சிஷராயிருப்பீர்கள் "** என்று சொன்னார் (யோவான் 15:8). இங்கே கனிகொடுப்பது என்பது நற்கிரியைகளைச் செய்வதாயிருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கேயே கனிகொடுக்கும் வாழ்க்கைதான். அதுவும் நாம் கிறிஸ்துவின் சீஷர்களாக இருக்க வேண்டுமென்றால் மிகுந்த கனிகளைக் கொடுக்க வேண்டும். எனவே, நாம் நேரம் கிடைக்கும்போது **அவ்வப்போது** நற்கிரியைகளைச் செய்கிறவர்களாயிருந்தால் மிகுந்த கனிகளைக் கொடுக்கிறவர்களாயிருக்க மாட்டோம். அதனால், நாம் கிறிஸ்துவுக்கும் சீஷர்களாயிருக்கமாட்டோம். ஏனென்றால் " என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார் " என்று கிறிஸ்து சொல்லி யிருக்கிறார் (யோவான் 15:2).

### III. சீஷத்துவத்தின் விலை

பிரியமானவர்களே! இவ்வுலகில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு விலை உண்டு. நாம் கிறிஸ்துவின் சீஷர்களாக வேண்டுமென்றால் அதற்கு நாம் விலை கொடுக்க வேண்டும். வாரத்தில் ஒரு நாள் சபைக்கு வந்து போகிறவர்களாக இருந்தால் சீஷர்களாக முடியாது. மாறாக, பார்வையாளர்களாக இருந்து கொள்ளலாம். இயேசு கிறிஸ்து " **யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் " என்று சொன்னார்** (லூக்கா 14:26). இவ்வுலகில் எல்லாவற்றை விட கிறிஸ்துவுக்கு நாம் முதலிடம் கொடுக்கவில் லையென்றால் அவருக்கு சீஷர்களாயிருக்க முடியாது, நம்மை நாம் வெறுத்து கிறிஸ்துவை நேசிக்கவில்லையென்றால் அவருக்கு நாம் சீஷர்களாக முடியாது. (லூக்கா 9:23). அடுத்ததாக, நாம் கிறிஸ்துவின் சீஷர்களாக கொடுக்கும் விலை அவருக்காகப் பாடுபடுவதாகும். அதனால் தான் கிறிஸ்து " தன் சிலுவையை சுமந்து கொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் " என்று சொன்னார் ( லூக்கா 14:27 ). இங்கே சிலுவை என்பது பாடுகளைக்குறிக்கிறது நாம் கிறிஸ்தவர்களாயிருந்தால் கிறிஸ்துவுக்கு சீஷர்களாகவே முடியாது. முதல் நூற்றாண்டில் கிறிஸ்து இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களில் பலர் சீஷத்து வத்துக்கான விலை கொடுக்க பயந்து அவரை விட்டு விலகிப்போனார்கள். நீங்களும் அப்படி விலகிப் போக மாட்டீர்கள் என்னும் எண்ணம் எனக்கு திண்ணமாக உள்ளது.

பிரியமான வாலிபர்களே! கிறிஸ்துவுக்கு சீஷனாயிருப்பதென்பது ரோஜா

மலர்கள் மீது நடப்பது போன்றதல்ல, அது முட்களின் மீது நடப்பது போன்றது. நாம் வெறுமனே கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்களாக இருந்தால் நாம் ஒருபோதும் உண்மை சீடர்களாக இருக்கமுடியாது. கிறிஸ்துவுக்கு சீஷர்களாக வேண்டுமென்றால் அவரை அப்படியே பிரதிபலிக்க வேண்டுமென்றும் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருந்து மிகுந்து கனிகளைக் கொடுக்கவேண்டுமென்றும், நம்மை நாமே வெறுத்து, இவ்வுலகில் எல்லாவற்றையும் விட அவருக்கு முதலிடம் கொடுத்து, அவருக்காக பாடுபடவேண்டுமென்றும் பார்த்தோம். இப்படி கிறிஸ்துவின் சீஷராக நாம் இத்தனை காரியங்களைச் செய்யும்போது அவர் நம்மை வெறுங்கையோடு விட்டுவிடுவாரா ? நிச்சயமாகவே இல்லை. கிறிஸ்து இவ்வுலகத்திலேயே சமாதானம், சந்தோஷம், இரட்சிப்பு போன்றவைகளைத் தருகிறார் ( யோவான் 14:27; 15:11; அப்4:12 ) வருகின்ற உலகத்திலும் கண்ணீர், கவலை, துக்கம் இல்லாமல் நித்திய காலமும் தேவனோடு வாழ்வோம்.அன்பானவர்களே! சீஷத்துவத்துக்கு நாம் கொடுக்கும் விலை அதிகமாக இருந்தாலும் நாம் பெற்றுக்கொள்ளும் பலன்கள் அதைவிட அதிகமாயிருக்கும் என்பது அலாதியானது!

## நாளும் நடப்பும்

- *அரசு ஊழியர் போராட்டத்தால் வாக்காளர் பட்டியல் செம்மைப் படுத்தும் பணி பாதிப்பு.*
- *வறட்சி நிவாரணம் தமிழகத்துக்கு ரூ1774 கோடி- மத்திய அரசு.*
- *பாகிஸ்தானுக்கு F-16 ரக போர் விமானங்களை அமெரிக்கா விற்கிறது.*
- *வடகொரியா அச்சுறுத்தலை எதிர் கொள்ள அணு ஆயுதம் தயாரிக்க வேண்டும்- தென் கொரியா.*
- *இலங்கையுடனான T-20 கிரிக்கெட் தொடரை இந்தியா வென்றது.*
- *தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா ஆதிக்கம்.*

சிறுவர் பகுதி

# இளைய குமாரன்

Bro. ஏபில் நாயகம்

சிறு தம்பி தங்கைகளோ! உங்கள் யாவருக்கும் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அனை வரும் சுகமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். அனைவரும் உங்கள் கல்வி ஆண்டின் இறுதியில் இருக்கிறீர்கள். உங்கள் இறுதித் தேர்வை எதிர்கொள்ளப் போகிறீர்கள். அப்படித்தானே! நீங்கள் வெற்றியோடு இந்த கல்வி ஆண்டை முடிக்க வாழ்த்துக்கள். சென்ற மாதம் வெளிவந்த பாடம் உங்களுக்குப் பயனுள்ளதாக இருந்திருக்கும் என விசுவாசிக் கிறேன். சரி, இந்த மாதம் நாம் கற்றுக்கொள்ளப் போகும் பாடம் என்னவென்று பார்ப்போமா?

மூன்றாவது, நற்செய்தி நூலாகிய லூக்கா 15 வது அதிகாரம் வசனம் 11 – 32 வரை வாசித்தால், நம் இயேசு ஆண்டவர் கூறின ஓர் அழகிய உவமையைக் காண முடியும். அது ஒரு தகப்பனையும், அவருக்கு இருந்த இரண்டு குமாரரையும் பற்றின ஓர் உவமை. ஒருவன் மூத்த குமாரன். மற்றொருவன் இளைய குமாரன். இந்த இளைய குமாரன் ஒரு நாள் தன் தகப்ப னிடம் வந்து தனக்குக் கிடைக்க வேண்டிய ஆஸ்தியின் பங்கை கேட்டான். தன் தகப்ப னிடம் என்ன குறையை கண்டா னோ தெரியவில்லை. ஆஸ்தியின் பங்கை வாங்கிக் கொண்டு தூர தேசம் போய் மகிழ்ச்சியாய் இருக்கலாம் என்று எண்ணம் கொண்டு ஒருவேலை அப்படி செய்திருக் கலாம். சரி, அப்படிப் போனவன் தன் ஆஸ்தியின் பங்கை துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி ( வ. 13 ) அழித்துப் போட்டான். அவன் சென்ற நேரம், அந்த தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று. எனவே, அவன் அந்த தேசத்திலே ஒருவனிடம் பன்றிகளை மேய்க்கும் வேலைக்காக சேர்ந்து கொண்டு, பன்றிகள் உண்ணும் தவிடு தனக்கு ஆகாரமாக கிடைக்காதா? என்று ஏக்கம் கொண்டான். அவன் செய்த மதியீனமான

காரியம் அவனுக்குப் புரிந்தபோது, தன் தகப்பனிடம் திரும்பச் செல்லலாம் என தீர்மானித்துக் கொண்டு தன் சொந்த ஊருக்கு திரும்பினான் தன் மகன் திரும்பி வருவதை தூரத்திலிருந்து பார்த்து அறிந்து கொண்ட தகப்பன், ஓடிப்போய் அவனை கட்டிக் கொண்டு, அவனை முத்தம் செய்தான். இளைய குமாரன், தான் செய்த தவறை உணர்ந்து தன் தகப்பனிடம் மன்னிப்பு கேட்டான். தகப்பன் தன் மகன் திரும்ப வந்த சந்தோஷத்தை ஒரு பெரிய விருந்து செய்து வெளிப்படுத்தினான்.



**இளைய குமாரன் வீடு திரும்பும் வழியைக் கண்டுபிடியுங்கள்**

இந்த உவமையில் தகப்பனாக சொல்லப்படுபவர் நம் பிதாவாகிய தேவனே. ஆம், நம் பிதாவாகிய தேவன் நம்மேல் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தும் உவமைதான் இது. இளைய குமாரனைப் போல் நாம் எவ்வளவு தவறு செய்தாலும், இந்த உவமையில் வரும் தகப்பனைப் போல், மனந்திரும்பி நாம் வந்தால் நம்மை அன்போடு ஏற்றுக்கொள்வார். நம் தேவன் அவ்வளவு அன்புள்ளவர். சங்கீதம் 86:5 ல் தாவீது இப்படியாகச் சொல்கிறார். **“ ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கி கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாய் இருக்கிறீர் ”.** இவ்வளவு அன்புள்ள தேவனை நாம் தெய்வமாகப் பெற்றிருப்பது எவ்வளவு பாக்கியமான காரியம் !!! அதற்கு நாம் நன்றியாக . இந்த இளம் பிராயத்திலிருந்தே இருக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்!.

---

## தேவனை நம்பி, ஆசீர்வாதம் பெறுங்கள்

- **உங்கள்** முழு இருதயத்தோடு அவரை நம்புங்கள் (நீதி.27:9)
- **உங்கள்** வழிகளிலெல்லாம் அவரை நம்புங்கள் (சங். 127:1)
- அப்பொழுது, **உங்கள்** வழிகளைச் செம்மைபடுத்தி நடத்துவார் ( சங்.23;ரோமர் 8:28)

மருத்துவக் குறிப்பு

# Rabies - ரேபிஸ்
# ( வெறி நாய்கடி )



**ரேபிஸ் என்றால் என்ன?**

மூளையையும், தண்டு வடத்தையும் பாதிக்கும் நோய் இது. பாதிக்கப்பட்ட பிராணிகளின் உமில் நீரில் வாழும் வைரஸ் இந்த நோய்க்கு காரணமாக இருக்கிறது. முறையான வைத்தியம் செய்யாவிட்டால் இது 100% மரணத்தை வருவிக்கும். வைத்தியம் இல்லை. தடுப்பு ஊசி மட்டுமே தீர்வு.

**எப்படிப் பரவும்?**

ரேபிஸ் நோயால் பாதிக்கப்பட்ட பிராணிகளின் உமிழ்நீரில் இந்த வைரஸ் காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட பிராணி நம்மை கடிக்கும்பொழுது அந்த வைரஸ் நம் இரத்தத்தில் கலந்து, நமக்கும் நோயை தரும். அதே சமயம் நம் தோலில் வெட்டுக்காயம் இருந்தால், பாதிக்கப்பட்ட பிராணி தீண்டும் போது நோய் நமக்கு ஏற்படும்.

**எந்தெந்த பிராணிகளிடம் இந்த நோய் இருக்கும் ?**

நாய், வெளவ்வால், நரிகள், ஓநாய்கள், ரக்கூண்

**ரேபிஸ் நோயை உடைய பிராணியை எப்படிக் கண்டுபிடிப்பது?**

ஒரு பிராணியைப் பார்த்து அதை சொல்லிவிட முடியாது. கடித்ததற்கு பின் அதை சில நாட்கள் கவனித்து நோயின் அறிகுறி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

**பிராணிகள் கடித்துவிட்டால் என்ன செய்வது?**

- உடனே செய்ய வேண்டியது குறைந்தபட்சம் 15 நிமிடம் சோப்பினால் கடித்த இடத்தைக் கழுவ வேண்டும்.
- நீரினால் தொடர்ந்து அந்த இடத்தைக் கழுவ வேண்டும்.
- அந்த இடத்தை "பேண்ட் எய்டு" ( Band Aid ) இட்டு மூடக் கூடாது.
- பின் மருத்துவரை அணுகி, தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். (Day 0, 3, 7, 14, 28, 90).
- தடுப்பூசியை நாள் தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ரேபிஸ் நோயின் அறிகுறிகள் ஒருவரது உடலில் தெரிய ஆரம்பித்துவிட்டால், அதற்கு வைத்தியம் இல்லை! 100% மரணம் தான்.

எனவே, தடுப்பூசியை தவறாமல் எடுத்துக்கொள்ள வேண்டும். செல்லப் பிராணிகளை வைத்திருப்பவர்கள், தங்களுக்கும் தாங்கள் பிராணிகளுக்கும் தடுப்பூசி கொடுக்க வேண்டும்.

Dr. Abel Nayagam
Vellore

# ஒருவர் எப்படி பரிசுத்தவானாகிறார்?

Bro. Hoyt Hattcock

**பு**திய ஏற்பாட்டில் நாம் **பரிசுத்தவான்**களைப் பற்றி வாசிக்கிறோம்; கொலோசெ பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும், விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு எழுதுகிறதாவது ( கொலோ. 1:2) என்றுள்ளது.

புதிய ஏற்பாட்டில் வெற்றிகரமான எழுத்தாளரான பவுலுக்கு **பரிசுத்தவான்** என்கின்ற பதத்தை கிறிஸ்தவர்களோடு சம்மந்தப்படுத்திப் பேசுவது வழக்கமான ஒன்றாகத்தான் இருந்தது. அவர் பரிசுத்தவான் என்கின்ற பதத்தை கொலோசெ பட்டணத்தில் இருந்த சபைக்கு எழுதும் போது மாத்திரம் பயன்படுத்தவில்லை, கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசம் வைத்திருந்த விசுவாசிகளுக்கும் பிலிப்பியர், தெசலோனிக்கேயர், பிலேமோன் போன்ற புத்தகங்களிலும் பயன்படுத்துகிறார்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் **பரிசுத்தவான்** என்கிற வார்த்தை வேதாகமத்தின் மற்றெந்த புத்தகங்களை விட அதிகமாக பதிமூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளது, அது மாத்திரமல்ல இந்த புத்தகத்தில், அதாவது வெளிப்படுத்தின விசேஷத்தில் **பரிசுத்தவான்** என்கிற பதம் மிக ஆழமானப் பொருளைக் கொடுக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், இந்தப் புத்தகத்தில் **பரிசுத்தவான்** என்கின்ற பதம் கிறிஸ்துவை ஆண்டவ ரென்று தங்கள் ஜீவியங்களில் ஏற்றுக் கொண்டவர்களை குறிக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது, அதுமாத்திரமல்ல, **பரிசுத்தவான்கள்** உண்மையுள்ளவர்களாகவும், இயேசுவின் உண்மையான சாட்சியாகவும் விவரிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, பரிசுத்தவான் என்பவன் ஒரு கிறிஸ்தவனாக, கிறிஸ்து இயேசுவுக்குள் ஆழமான நம்பிக்கை உடையவனாக, ஞானஸ்நானத்தின் மூலம் தேவனுடைய குடும்பத்தில் பிறந்தவனாக, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தின்படி செய்கிறவனாக

இருக்கிறான். ஓர் உண்மையான பரிசுத்தவான் தன்னுடைய வாழ்க்கை யிலே, பேச்சிலே தான் இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள, அர்ப்பணிக் கப்பட்ட சீஷன் என்பதை வெளிப்படுத்துகிறான். ஒருவர் பரிசுத்தவானா யிருப்பதற்கு அவர் தீமையினின்று விலகி, தன்னை முழுமையாக தேவனிடத்தில் அர்ப்பணித்துக் கொள்வது அவசியமாயிருக்கிறது.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாயிருப்பதற்கு நம் நடக்கை களெல்லாவற்றிலும் பரிசுத்தமாயிருப்பது அவசியமாயிருக்கிறது. ஏனென் றால், **நான் பரிசுத்தர் ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருங்கள்** என்று எழுதியிருக்கிறதே (1பேதுரு 1:16) இங்கே உட்பொருளாக சொல்லப்பட்டி ருக்கிறது என்னவென்றால், ஒரு கிறிஸ்தவன் தன்னை இந்த உலகத்தி லிருந்து பிரித்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்பது தான்.

பவுல் மறுபடியும் இப்படியாக எழுதுகிறார், அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை, நீங்கள் இந்தப் பிரபஞ்சத் திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:1, 2).

கேட்டுகேட்டு அலுத்துப்போன வாக்கியமாகிய நான் பரிசுத்தவானல்ல என்பதை ஒரு கிறிஸ்தவன் உபயோகிப்பது பரிசுத்தவான் என்கின்ற பதத்தை தவறாக பயன்படுத்துவதாகும். ●

---

## அன்பிற்கான ஒரு விளக்கம்

- ஒருவன் காயப்படுத்தும்போது அமைதியாக இருக்கும்
- சக மனிதர்கள் அவமதிக்கும்போது பொறுமையாக இருக்கும்
- தன்னைப் பற்றித் தவறானவைகள் வரும்போது தேவனிடம்உண்மையுள்ள தாக இருக்கும்
- பிறருடைய அபிப்ராயங்களை அலட்சியப்படுத்தாமலிருக்கும்
- தன்னுடைய சேவைக்கான தேவை வரும்போது அந்த இடத்தில் இருக்கும்
- பிறர் துயரைத் துடைப்பதில் தைரியமுள்ளதாக இருக்கும்.

# மன்னிப்பும், ராஜ்யமும்

(மத்தேயு 18 : 15 – 35)

Gary C. Hampton

**தனக்கு விரோதமாக பாவஞ்செய்கிற உங்களுக்கு கிறிஸ்தவனுடைய பதில் : -**

மனித உறவுகளில் சாதாரணமாக ஒருவர் மற்றவருக்கு விரோதமாக பாவஞ் செய்வதுண்டு. குற்றத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் தனக்கு விரோதமாகக் குற்றம் செய்தவனிடத்தில் போய் அவனை மீட்டமைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று இயேசு அறிவுறுத்தினார். இது யூத மதக்குருக்களின் போதனைகளுக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது. அவர்கள், யார் குற்றம் செய்தார்களோ அவர்கள், சாட்சிகளுக்கு முன்பாக பாதிக்கப்பட்டவர்களிடத்தில் தங்கள் தவறை சரி செய்ய வேண்டும் என்று போதித்தார்கள். சில வேளைகளில், குற்றம் செய்தவர்கள் இவ்விதமாக மூன்று முறை செய்ய வேண்டுமென்று யூத மத குருக்கள் சொல்வார்கள். இங்கே நாம் கவனித்தால், மதகுருக்கள் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்காக அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. மாறாக, குற்றம் செய்தவர்களை தாழ்மைப்படுத்தி, இழிவுப்படுத்துவதே அவர்கள் நோக்கமாயிருந்தது. நிச்சயமாக, குற்றம் செய்தவர் தன் குற்றத்தை உணர்ந்தால், அவனும் பிரச்சனையைச் சரிப்படுத்த கடமைப்பட்டிருக்கிறான் (மத். 5:23,24).

**என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்?**

கர்த்தருடைய உபதேசம் பற்றிய பேருதுவின் கேள்வி, கர்த்தருடைய அன்பின் இருதயத்தைப் பேதுரு சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. Edershein என்பவருடைய கூற்றுப்படி, மூன்று முறைக்குமேல் மன்னிப்பு வழங்கப்படக்கூடாது என்று யூத ரபீக்கள் போதித்திருக்கிறார்கள். எனவே, பேதுரு தன் சகோதரனை ஏழுதரம் மன்னிக்க வேண்டுமோ? என்று கேட்டதினால், தான் சற்று தாராளமாக இருப்பதாக ஒருவேளை பேதுரு நினைத்திருக்கலாம். ஆயினும், இயேசுவின் பதில், அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் எவ்வளவு அன்பும், அக்கறையும் உடையவராயிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. அப்படி மன்னிக்கும்

அன்பான இருதயம் இருக்குமானால் தவறை எத்தனை தரம் மன்னிக்க வேண்டும் என்கிற கேள்வியே எழும்பாது.

உண்மையாகவே, கிறிஸ்தவனுடைய மன்னிக்கும் எல்லை தேவனுடைய மன்னிக்கும் எல்லையைப் போலிருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் பிதாவின் அன்பை வெளிப்படுத்தப் பாடுபட வேண்டும் (மத்தேயு 5:43-48). இத்தகைய சிந்தை இயேசு சொன்ன உவமைகளின் பின் இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

**தேவனுடைய ஆச்சரியமான கிருபை**

இயேசு சொன்ன இந்த உவமையில் வரும் ராஜா தேவனாயிருக்கிறார். இங்கே இந்த ராஜா தன் வேலைக்காரர்களை கணக்கொப்புவிக்கும்படி கேட்டுக் கொண்டார். ராஜாவுக்கு முன்பாக பத்தாயிரம் தாலந்துகள் கடன்பட்டவனைக் கொண்டு வந்தார்கள். ஒரு தாலந்து என்பது தங்கத்தில் தோராயமாக நூற்றிமுப்பத்தொன்று பவுண்டுகள் எடையுடைய காசுகளாக இருந்திருக்கிறது அல்லது வெள்ளியில் நூற்றிப்பதினேழு பவுண்டுகள் எடையுடைய காசுகளாக இருந்திருக்கிறது. வேறுவிதமாகச் சொன்னால் இந்தக் கடன் மிகப்பெரிய தொகையாக இருந்திருக்கிறது.

எடர்ஷீன் என்பவர், இவ்விதமாகச் சொன்னார். அவருடையவைகளை நிர்வகிக்கும்படியாக நம்மிடம் ஒப்புக்கொடுத்திருக்கிற பரலோகப் பிதாவிற்கு நாம் எல்லோரும் கடனாளிகளாக இருக்கிறோம், நாம் கொள்ளையடித்தது, தவறாகப் பயன்படுத்தியது போன்றவைகளைச் சேர்த்துப் பார்த்தால் சொல்லமுடியாத அளவுக்குக் கடன்பட்டிருக்கிறோம், அவைகளை நம்மால் திருப்பிச் செலுத்தவே முடியாது. அவர் தொடர்ந்து நம்மை விடுவிக்கும்படியாக சுவிசேஷத்தை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

மனித இனத்தின்மீது தேவனுடைய ஆச்சரியமான அன்பு, அந்த அளவு மிகப்பெரிய கடனை மன்னிப்பதற்கு ராஜா விருப்பம் தெரிவித்ததில் தெரிகிறது. இஸ்ரவேலரின் பாடகர் இவ்விதமாகப் பாடினார். மேற்குக்கும், கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார் (சங்கீதம் 103:12). அவர் தொடர்ந்து இவ்விதமாகச் சொல்கிறார். **இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக; கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு.** (சங்கீதம் 130:7). நாம் அவருக்குக் கீழ்ப்படிந்தால் பாவத்தின் ஆழமான கறைகளை அவர் முற்றிலுமாக எடுத்துப்போட சித்தமுள்ளவராயிருக்கிறார். மனந்திரும்ப விரும்பி ஞானஸ்நானத்தின் மூலமாக புதிய மனிதனாக மாற விரும்புபவர்களின் பாவங்களை முற்றிலுமாகக் கழுவுவதாக தேவன்

வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். கிறிஸ்துவுக்குள்ளிருந்து தன் பாவங்களை அறிக்கையிடுபவர்களை உண்மையாக மன்னிப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (அப்போஸ்தலர் 3:19; 1யோவான் 1:9).

### இரக்கமற்ற வேலைக்காரன்

அந்த வேலைக்காரன், ராஜா தனக்கு என்ன செய்தார் என்பதை முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை. அது தன்னுடைய சக வேலைக்காரன் தனக்குச் செலுத்த வேண்டிய சிறிய தொகையை அவனிடத்தில் பலவந்தமாய்க் கேட்டதிலிருந்து தெரிகிறது. அந்த சக வேலைக்காரன் இவன் ராஜாவினிடத்தில் விடுத்த அதே வேணடுகோளையே விடுத்தான். இருந்தபோதிலும், இவன் சக வேலைக்காரனுக்கு பணத்துடன் வருவதற்கு நேரத்தைக்கூட கொடுக்கவில்லை, அவனைக் கடனாளிகளின் காவலில் போட்டுவிட்டான்.

இந்த வேலைக்காரனின் செயல்பாட்டைப் பார்த்து, மற்ற சக வேலைக்காரர்கள் அதிர்ச்சி அடைந்து நடந்ததை ராஜாவிடம் அறிவித்திருக்கிறார்கள். இங்கே இந்த மனிதனுடைய கண்ணிலிருந்து உத்திரம் ராஜாவின் இரக்கத்தால் எடுக்கப்பட்டதை உணராதவனாக இவன் காணப்பட்டான். இங்கே இந்த மனிதன் தன் சக வேலைக்காரனுடைய துரும்பை எடுத்திருக்கிறான் (மத். 7:1-5). கடிந்து கொள்வதற்குப் பதிலாக இவன் அவனை மன்னித்திருக்க வேண்டும். இப்படியிருக்கிறபடியால், தேவனால் மன்னிக்கப்படுகிறவர்கள் பிறரை மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டும் (மத். 6:12,14,15). பவுல் எபேசு பட்டணத்து சகோதரர்களுக்கு சொல்லும் போது இவ்விதமாகச் சொன்னார். ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மனித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபே. 4:32).

### மன்னிக்காத மனதுக்கு தேவனுடைய பதில்

நடந்தவைகளை ராஜா கேட்டபோது கடுங்கோபங் கொண்டான். தான் அந்த வேலைக்காரனுக்கு மனித்தது போல அவனும் மன்னிக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். அந்த வேலைக்காரன் அப்படிச் செய்யாததினால் அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். இவ்வளவு பெரிய கடன் தொகையை அந்த வேலைக்காரன் அந்த சிறைச் சாலைச் சுவர்களுக்குள்ளிருந்து எப்படி திருப்பிச் செலுத்தமுடியும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்!

அது பாடுகள் நிறைந்த நித்திய தண்டனையாயிருக்கும். அப்படியே இயேசு நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால் என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார் (மத்தேயு 18:35). ஏனென்றால், நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய பார்வையில் பாவம் செய்திருக்கிறோம். நம் பாவங்கள் நித்திய மரணத்திற்கு பாத்திரமானவைகள் (ரோமர் 3:10,23; 6:23). ஆயினும், நம் பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்கும் படியாக தேவன் சொல்ல முடியாத ஈவாகிய அவருடைய குமாரனை நமக்காக அந்த கல்வாரி சிலுவையில் ஒப்புக் கொடுத்தார் (கொரி. 9:15; யோவான் 3:1617) நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல் லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார் (ஏசாயா 53: 6). நிச்சயமாக, இத்தகைய மாபெரும் கடனிலிருந்து நம்மை தேவன் விடுவித்ததற்கு நன்றி செலுத்தும் விதமாக நாம் நமக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களை மன்னிக்க வேண்டும்.



### மனிதனை இரட்சிப்பதற்கான தேவனுடைய திட்டம்

- தேவனுடைய கிருபை - எபேசியர் 2 : 8
- கிறிஸ்துவின் இரத்தம் - ரோமர் 5 : 9
- பரிசுத்த ஆவியானவரின் வார்த்தை - II தீமோத்தேயு 3 : 16, 17
- பாவியின் விசுவாசம் - அப்போஸ்தலர் 16 : 31
- பாவியின் அறிக்கை - ரோமர் 10 : 10
- பாவியின் ஞானஸ்நானம் - I பேதுரு 3 : 21
- கிறிஸ்தவனின் கிரியை - யாக்கோபு 2 : 24
- கிறிஸ்தவனின் நம்பிக்கை - ரோமர் 8 : 24
- கிறிஸ்தவனின் நிலைத்து நிற்கும் தன்மை - மத்தேயு 24 : 13

# திராட்சத் தோட்டமும் சபையும்

சகோ. K. பாஸ்கர்

**கி**றிஸ்துவுக்குள் அன்பார்ந்த வாசகர்களே! ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே வாழ்த்துக்கள் பல. தொடர்ந்து இக்கட்டுரையை படித்து வருவது குறித்து மகிழ்ச்சி. அதோடு வேத வசனத்தோடு கட்டுரையை ஒப்பிட்டுப் பார்த்து வசன ரீதியான கிறிஸ்துவின் சபையைக் கண்டு அதற்குக் கீழ்ப்படியுங்கள்.

திராட்சத் தோட்டத்தைக் குறித்து ஓர் உவமையை ஆண்டவர் இயேசு சொன்னார். அதின் விளக்கத்தை அறிந்து கொள்வோமாக!

## I. <u>உவமை ( மத்தேயு 21 : 33 - 44 )</u>

வேறொரு உவமையைக் கேளுங்கள் வீட்டு எஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான். அவன் ஒரு திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி அதைச் சுற்றிலும் வேலியடைத்து அதில் ஒரு ஆலையை நாட்டி கோபுரத்தையும் கட்டி தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாக விட்டு புறத்தேசத்துக்கு போயிருந்தான். கனி காலம் சமீபத்தபோது அதின் கனிகளை வாங்கிக் கொண்டு வரும்படி தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரனிடத்தில் அனுப்பினான். தோட்டக்காரர் அந்த ஊழியக்காரரைப் பிடித்து ஒருவனை அடித்து ஒருவனைக் கொலை செய்து ஒருவனைக் கல்லெறிந்து கொல்லுங்கள். பின்னும் அவன் முந்தினவர்களிலும் அதிகமான வேறே ஊழியக்காரரை அனுப்பினான். அவர்களையும் அப்படியே செய்தார்கள். கடைசியிலே அவன் தன் குமாரனுக்கு அஞ்வார்கள் என்று சொல்லி தன் குமாரரை அவர்களிடத்தில் அனுப்பினான். தோட்டக்காரர் குமாரனைக் கண்ட போது இவன் சுதந்திர வாலிபன் இவனைக் கொன்று இவன் சுதரதரத்தைக் கட்டுக் கொள்வோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டு அவனை பிடித்து திராட்சத் தோட்டத்துக்குபுறம்பே தள்ளி கொலை செய்தார்கள். அப்படியிருக்க திராட்சத் தோட்டத்தில் எஜமான் வரும்

போது அந்தத் தோட்டக்காரரை என்ன செய்வார் என்று கேட்டார். அதற்கு அவர்கள் அந்தக் கொடியவரை கொடுமையாய் அடித்து ஏற்ற காலங்களில் தனக்கு கனியைக் கொடுக்கத்தக்க வேறு தோட்டக்காரனிடத்தில் திராட்சத் தோட்டத்தைக் குத்தகையாக கொடுப்பான் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லை மூலைக்குத் தலைக் கல்லாயிற்று அது கர்த்தராலே ஆயிற்று அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிற்று என்று நீங்கள் வேதத்தில் ஒருகாலும் வாசிக்கவில்லையா? ஆகையால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். இந்தக் கல்லின் மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான். இது எவன் மேல் விழுமோ அவனை நறுக்கிப் போடும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

## II. <u>சபை ஒரு பாதுகாக்கப்பட்ட இடம்</u>

இந்த உவமையில் வரும் எஜமான் தன் திராட்சத் தோட்டத்தைச் சுற்றிலும் வேலி அடைத்தார். அது போல எஜமானாகிய தேவன் தமது சபையை சுற்றிலும் வசனத்தால் வேலி அடைத்தார். தேவனுடைய தாசனாகிய யோபுவைச் சுற்றிலும் வேலி அடைத்தார் ( யோபு 1 : 10 ). இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு திராட்சத் தோட்டத்திற்கு ஒப்பாக இருக்கிறார்கள். அந்த திராட்சத் தோட்டத்தைச் சுற்றி வேலியடைத்திருந்தார்கள் (ஏசாயா 5 : 1, 2). இன்று சபை ஒரு திராட்சத் தோட்டம். அதைச் சுற்றிலும் வசனத்தால் வேலியடைத்திருக்கிறார். எனவே, சபை ஒரு பாதுகாப்பு கொடுக்கிற இடம். இஸ்ரவேல் ஜனங்களுக்கு யோசுவா என்ற தேவதாசன் கானான் தேசத்தை பகிர்ந்து கொடுத்தார். அப்போது கொலை என்ற பாவத்தை செய்தவர்களுக்கு ஆறு அடைகலப் பட்டணம் தனியாகக் கொடுத்தார். (எண். 35 : 6, 11, 27). அது போல இன்று விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்று மனந்திரும்பி குணப்பட்டவர்கள் அதாவது இரட்சிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பான இடம் சபை. இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ( அப். 2 : 47 ). அதைச் சுற்றிலும் தேவன் வேலியடைத்திருக்கிறார். எனவே, சபை ஒரு பாவி மனந்திரும்பி வரும்போது அவனுக்குப் பாதுகாப்பான இடமாக உள்ளது.

## III. சபை கனிகளைக் கொடுக்கும் இடம்

இந்த உவமையில் வரும் எஜமானன் அந்த திராட்சத் தோட்டத்தின் நடுவிலே ஒரு ஆலையை உண்டாக்கி திராட்சப் பழங்களுக்காக காத்திருந்தார். ( மத். 21 : 34 ). அது போல இன்றும் சபை கனிகளைக்

கொடுக்க வேண்டும். அதாவது, சபை ஆத்துமா ஆதாயம் செய்ய வேண்டும். அதே சமயத்தில் பக்தி விருத்தி அடையச் செய்ய வேண்டும். ( எபே. 4 : 12, 13 ). சபையில் நிலைத்திருப்பவர்களே கனியைக் கொடுக்க முடியும் நாம் நிறைய கனிகளைக் கொடுக்க வேண்டும் என்பது தேவனின் விருப்பம் (யோவான் 15 : 1 – 10). சபை வெறுமனே வந்துபோகும். இடமல்ல, தூங்கும் மடமல்ல. அது ஆத்துமா ஆதயப்படுத்தும் இடமாக உள்ளது ( அப். 2 : 47, 4 : 4, 5 : 14, 6 : 7).

## IV. சபை கனியற்றதாக இருந்தால் நீக்கப்படும் அபாயம்

இந்த உவமையில் எஜமான் கனிகளை எதிர்பார்த்திருந்தார். ஆனால் கனிகளைக் கொடுக்கவில்லை. எனவே, தோட்டக்காரராகிய வேதபாரகர், பரிசேயர் என்பவர்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு அதற்கேற்ற ஜனங்க ளிடத்திற்குக் கொடுக்கப்படும் ( மத். 21 : 43 ). இது நமக்கு எச்சரிப்பவை உண்டாக்குகிறது. எபேசு பட்டணத்திலிருந்து கிறிஸ்துவின் சபை சுவிசேஷத்தின் மீது கொண்ட ஆதி அன்பை விட்டு விட்டார்கள். அதாவது ஆத்தும ஆதாயம் செய்வதை நிறுத்திவிட்டார்கள். ஆகவே ஆண்டவர் இயேசு அந்தச் சபைக்குச் சொல்லும் போது நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக. இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத்தண்டு அதனிடத்தினின்று நீக்கி விடுவேன்( வெளி 2:5 )என்று சொல்லுகிறார். அது போல இன்று எபேசு பட்டணம் ஒரு குக்கிரமமாக இருக்கிறது. ஆனால், சபை அங்கு இல்லை. காரணம் அவர்கள் தேவனுக்கேற்ற கனிகளைக் கொடுக்கவில்லை. இயேசு அதை நீக்கிவிட்டார். இன்று நம்மிடம் சபை உள்ளது. நல்ல கனிகளை கொடுக்க வேண்டும். இல்லையென்றால் நம்மிடத்திலிருந்து நீக்கிவிடுவார் என்பதை நினைத்து நல்ல கனிகளைக் கொடுப்போம். கனியற்ற அந்தகாரக்களை கிரியை விலக்குவோமாக! (எபே. 5 : 11).

●

---

தேவன் **எப்பொழுதும்** அவருடைய ஒரே பேரான குமாரனுடைய ஜெபத்தைக் கேட்டிருக்கிறார். அந்த தேவக்குமாரன் என்னில் உருவாகிவிட்டால், அந்த தேவன் என்னுடைய ஜெபத்தையும் **எப்பொழுதும்** கேட்பார். நாம் கவலையில்லாமல் வாழலாம்!

No. 169/56, பட்டேல் ரோடு,
பெரம்பூர். (ரயில் நிலையம் எதிரில்)
சென்னை – 600 011

பேச்சாளர்கள் :

. பெட்டி பர்டன் சோட் (அமெரிக்கா)
Sis. Betty Burton Choate ( USA )

சகோ. ரேச்சல் நாயகம்

ாதரிகளின் குடும்ப வாழ்வுக்கும், சபை
ழ்வுக்கும் மிகவும் பயனுள்ள செய்திகள்
திக்கப்பட உள்ளது.

தொடர்புக்கு :
98427 30382, 99655 30385



சகோ. பெட்டி பர்டன் சோட் (அமெரிக்கா)
Sis. Betty Burton Choate ( USA )
சகோ. ரேச்சல் நாயகம்

சகோதரிகளின் குடும்ப வாழ்வுக்கும், சபை வாழ்வுக்கும் மிகவும் பயனுள்ள செய்திகள் போதிக்கப்பட உள்ளது.

தொடர்புக்கு : 98427 30382, 99655 30385

ஜெபியுங்கள் ! பங்குபெறுங்கள் !! ஆசீர்வதிக்கப்படுங்க

## சிறப்பு பெண்கள் வகுப்பு

நாள் : 20.3.2016 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மதியம் 12.00 – மாலை 3.00 மணி
இடம் : எக்லீசியா பள்ளி வளாகம்
தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.

பேச்சாளர்கள் :


சகோ. பெட்டி பர்டன் சோட் (அமெரிக்கா)
Sis. Betty Burton Choate ( USA )
சகோ. ரேச்சல் நாயகம்

சகோதரிகளின் குடும்ப வாழ்வுக்கும், சபை வாழ்வுக்கு
மிகவும் பயனுள்ள செய்திகள் போதிக்கப்பட உள்ளது.

தொடர்புக்கு : 98427 30382, 99655 30385



ங்களது
இதர
ளியீடுகள்




Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால்
செலவிற்கு
பணம்
அனுப்பி
இந்நூல்களைப்
பெற்றுக்
கொள்ளலாம்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்
ஒரு புதிய அத்தியாயம்**

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.

Annual Subscrip

# திருமறை ஆசா

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 29 இதழ் – 2 பிப்ரவரி 2016

